JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **213/2009** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | துரைசாமி | Village | நொய்யல் , பங்களா நகர், திருச்சி |
| Father's Name | சண்முகதாஸ் | Taluk | |
| | | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths  Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 25.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பனியன் கம்பெனி சூப்பர் வைசராக வேலையில் இருந்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் மாரியம்மன் காம்ப்ளக்ஸ் முகமதியர் வீதி குன்னத்துர் ரோடு பெருந்துறை என்ற முகவரியில் குடியிருந்தேன். நான் அப்போது சக்தி நிட்டிங என்ற கம்பெனியில் வேலை செய்து வந்தேன். 04.01.2009 ம் தேதி அன்று நான் வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு வந்து என்னுடைய சோனி எரிக்சன் W200 என்ற போனை பக்கத்தில் வைத்து விட்டு படுத்திருந்தேன். இரண்டு நபர்கள் திடீரென்று உள்ளே வந்து போனை எடுத்துக் கொண்டு இருந்தார்கள் நான் சத்தம் போட பக்கத்து ரூமில் இருந்த வெங்கடேஷ் மற்றும் கலைச்செல்வன் ஓடி வந்து அவர்களை பிடித்து விட்டார்கள்.

2. நாங்கள் அந்த இரண்டு நபர்களையும் விசாரிக்க இரண்டு பேரும் ஒருவர் பெயர் மணி என்கிற மணிகண்டன் என்றும் மற்றொரவர் பெயர் கோபால் என்றும் சொன்னார்கள். அவர்கள் எனது செல்போனை திருடிச் சென்று விற்பதற்காக எடுத்ததாக சொன்னார்கள். இருவரையும் பிடித்துக் கொண்டு வந்து பெருந்துறை காவல்

நிலையத்தில் ஒப்படைத்தோம். செல்போனை எடுத்த இரண்டு நபர்களையும் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியுமா என்றால் 14 வருடங்கள் ஆகிவிட்டதால் முகம் மறந்து விட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடைய போனை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்காலப் பொறுப்பில் பெற்றிருந்தேன் ஆனால் போன் தற்போது பயன்பாட்டில் இல்லாததால் அதனை கொண்டு வரவில்லை. பெருந்துறை போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** என்னுடைய வேலை நேரம் என்ன என்றால் காலை 6.00 மணிக்கு சென்று மதியம் 2 மணிக்கு வந்து விடுவேன். நான் தங்கி இருந்த வீட்டின் அருகில் மற்ற வீடுகளும் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் யார் யார் என்னுடைய வீட்டில் இருந்தோம் என்றால் நான் மட்டும்தான் இருந்தேன். வீட்டை நான் பூட்ட வில்லை என்றால் சரிதான். பொதுவாக நான் வீட்டை பூட்டி வைப்பேனா என்றால் இல்லை. நான் சத்தம் போட்ட பிறகுதான் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்த போது தான் எதிரிகளை பார்த்தேன் அதற்கு முன்பாக பார்த்ததில்லை என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு காம்பவுண்ட் வீடா என்றால் இல்லை இரண்டு வீடுகள் கீழே உள்ளது இரண்டு வீடுகள் முதல் தளத்தில் உள்ளது. நான் தூங்கிக் கொண்டிருந்தேன் என்று சொல்லி உள்ளேன் எவ்வாறு போனை எடுத்ததை தெரிந்து கொண்டேன் என்றால் எனது பக்கத்தில் போன் இருந்ததால் எடுத்ததை உணர்ந்து எழுந்தேன்.

2. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்துக்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒரு கிலோ மீட்டர் தூரம். எதிரிகளை எவ்வாறு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோம் என்றால் நடந்தே வந்தோம். யார் யார் காவல் நிலையத்துக்கு வந்தோம் என்றால் நானும் வெங்கடேசனும், கலைச்செல்வனும் வந்தோம். காவல் நிலையத்திற்கு வந்து நடந்த சம்பவங்களை சொல்லி புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். புகாரில் எங்கள் மூன்று பேரிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் தேதி

நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் கையெழுத்துக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. போலீசார் அதன்பிறகு என்னை விசாரித்தார்களா என்றால் மீண்டும் ஒருமுறை விசாரித்தார்கள். நான் சொன்னது போல் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றும் எதிரிக்கும், வழக்குக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் சொன்னதன் பேரில் பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை